# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணகூட்டம் 20.12.2023 ஆம் தேதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர்மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிப் பகுதியில் மொத்தம் 33-வார்டுகள் உள்ளன. 33-வார்டுகளில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 18.10.2023 கடிதத்தின் படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 26.10.2023-ந் தேதிய கடிதத்தின் படியும் வடகிழக்கு பருவமழையின் காரணமாக பழுதடைந்த ஆபத்தான நிலையில் உள்ள கட்டிடங்கள் சம்பந்தப்பட்ட வார்டு உறுப்பினர்களுடன், ஆணையாளர், நகரமைப்பு அலுவலர், நகராட்சி பணியாளர்களுடன் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்யப்பட்டதில் மிகவும் பழுதடைந்து மிகவும் பாதிப்படைந்து இடிந்து விழும் நிலையில் உள்ள கட்டிடங்களையும் மற்றும் மழையினால் பாதிக்கப்படும் கட்டிடங்களையும் ஆய்வு செய்து அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.<br>மேற்கண்ட மழையினால் பாதிக்கப்பட்ட கட்டிடங்களில் வசிக்கும் மக்களுக்கு வெளியேற அறிவுறுத்தியும் அக்கட்டிடத்தினை விட்டு வெளியேறாமல் அங்கேயே உள்ளனர். அக்கட்டிடத்தில் உள்ள மக்களுக்கான உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை உள்ளது. மேற்கண்ட கட்டிடங்களையும், இடிந்த சுவர்களையும் நகராட்சியின் மூலம் அகற்றப்பட வேண்டியுள்ளது. மேலும், நகராட்சியில் உள்ள வார்டு பகுதியில் பெரும்பாலான இடங்களில் மிகவும் பழுதடைந்து பாதிக்கப்பட்ட நிலையிலும், அபாயகரமான நிலையிலும் கட்டிடங்கள் உள்ளன. அவ்வாறான கட்டிடங்களில் யாரும் குடியிருக்கவில்லை. ஆனால் அக்கட்டிடத்திற்கு அருகில் குடியிருப்பவர்களுக்கும் மற்றும் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் எவ்வித பாதுகாப்பும் இல்லாத நிலை உள்ளது<br>மேற்கண்ட கட்டிடங்களின் உரிமையாளர்கள் கட்டிடத்தின் வளாகத்திலோ கட்டிடத்திற்கு அருகிலோ, வசிப்பதில்லை, மேற்கண்ட கட்டிட உரிமையாளர்களை அவசர அவசியம் கருதி உடனடியாக தொடர்பு கொள்ள இயலவில்லை, ஆனால் மேற்கண்ட பழுதடைந்த அபாயகரமான கட்டிடங்கள் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் இருப்பதால் நகராட்சியின் மூலம் மேற்கண்ட கட்டிடங்களையும் மற்றும் மழையினால் பாதிக்கப்படும் கட்டிடங்களையும் அகற்ற வேண்டிய நிலை உள்ளது. எனவே மேலும் மேற்கண்ட கட்டிடங்களை நகராட்சியின் மூலம் அப்புறப்படுத்த ஆகும் தோராய செலவினத் தொகை ரூ 10,00,000/- ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** :- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 3357/2023/எப்1<br><br>தீர்மான எண் : 722<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

2 மேட்டுப்பாளையம் நகராட்சி அரசாணை எண் 39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.09.2023ன் கீழ் கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு நிதி | நகராட்சி பங்கு தொகை |
|---|---|---|---|---|
| 1 | கீழ் வார்டு எண் 24 பேருந்து நிலையத்தை நவீன மையமாக்குதல் பணிக்கு (க.ச.எண் 55 மற்றும் 56 | ரூ.863.00 இலட்சம் | ரூ.431.00 இலட்சம் | ரூ.432.00 இலட்சம் |

மேற்காணும் பணிக்கு தலைமைப் பொறியாளர் அவர்கள், நகர் நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 31.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்கண்ட பணிக்கு 31.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் offline மூலம் எவ்வித ஒப்பந்தப்புள்ளி வரப்படவில்லை மற்றும் இணையதளம் மூலம் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளி கள் வரப்பட்டது.

| வ.எண் | பணியின் பையர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 24 பேருந்து நிலையத்தை நவீன மயமாக்குதல் பணி | ரூ.863.00 இலட்சம் | 1) திருவாளர். தன்யா பிராஜக்ட்ஸ் ஈரோடு<br>2) திருவாளர்.கௌசிக்&கோ பிராஜக்ட்ஸ் ஈரோடு |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறையினை 02.10.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டு இரண்டு ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்பத் தகுதி பெற்று 06.10.2023 அன்று விலைப்புள்ளி உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திருவாளர்.தன்யா பிராஜக்ட்ஸ் அவர்கள் மதிப்பீட்டிற்கு கூடுதலாக 1.08% விகிதம் கொடுத்துள்ளார் மற்றும் திருவாளர். கௌசிக் & கோ பிராஜக்ட்ஸ் அவர்களின் விலைப்புள்ளி உறை தவறாக பதிவேற்றம் செய்யப்பட்டதால் திறக்க இயலவில்லை. எனவே திருவாளர்.தன்யா பிராஜக்ட்ஸ் அவர்கள் மதிப்பீட்டிற்கு அதிகமாக கொடுத்துள்ளதால் விலைக்குறைப்பு செய்து தரக்கோரியதில் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டிற்கு 0.03% விகிதம் குறைத்து தருவதாக கடிதம் கொடுத்துள்ளார். எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.தன்யா பிராஜக்ட்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:3852/2023/இ1

தீர்மான எண் : 723

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

3 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான கே.கே. நகர் மேல்நிலை தொட்டி, மணிநகர் மேல்நிலை தொட்டி, சங்கர் நகர் மேல்நிலை தொட்டி, பழைய அலுவலகம் மேல்நிலை தொட்டி, பூஸ்டர் நிலையம் மற்றும் சாமண்ணா தலைமை நீரேற்று நிலையம், உரக்கிடங்கு ஆகியவற்றில் புதிதாக கண்காணிப்பு கேமரா (CCTV) பொருத்துவதற்கு ரூ. 6.5 இலட்சம் குடிநீர் நிதியின் கீழ் பணிகளி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண் : 724

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

4 மேட்டுப்பாளையம் நகராட்சியில் காட்டூர் சாலையில் உள்ள Line Booster நிலையம் GI Sheet கொண்டு சுமார் 20 வருடங்களுக்கு முன் அமைக்கப்பட்டதாகும். இது தற்போது மிகவும் பழுதடைந்துள்ளதால் மழைநீர் உட்புறம் வருகிறது, இதனால் மின் மோட்டார் பாதிக்கப்படும் நிலையில் உள்ளது, எனவே புதிதாக Galvanizer sheet கட்டிடம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ4.50 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ளப்பட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

**அலுவலகக் குறிப்பு**:- அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண் : 725

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

5 மேட்டுப்பாளையம் நகராட்சி SBM 2.0 5வது மாநில உயர்மட்ட குழுமம் கீழ் Cesspool வாகனம் வாங்குதல் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:9192/2022/SBM1 நாள்:21.08.2023ல் cesspool வாகனம் வாங்க ரூ.43.25 இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | மத்திய அரசு பங்களிப்பு தொகை | மாநில அரசு பங்களிப்பு தொகை | நகராட்சி பங்களிப்பு தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு 6000 Litre Cesspool வாகனம் வாங்குதல் பணிக்கு | ரூ.43.25 இலட்சம் | ரூ.21.63 இலட்சம் | ரூ.14.27 இலட்சம் | ரூ.7.35 இலட்சம் |

மேற்கண்ட பணிக்கு மண்டல செயற்பொறியாளர் நகராட்சிகள் மண்டல நிர்வாக இயக்குநரகம், திருப்பூர் அவர்களிடமிருந்து தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 16.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இணையதளம் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது.

எனவே இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறையினை 27.10.2022 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு 6000 Litre Cesspool வாகனம் வாங்குதல் பணிக்கு | ரூ.43.25 இலட்சம் | திருவாளர். ABT இண்டஸ்ட்ரீஸ்<br>திருவாளர். A.S.R Body Works | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு<br>மதிப்பீட்டிற்கு சமமாக |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர். ABT இண்டஸ்ட்ரீஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ஒப்புதல் கடிதம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண்:3314/2023/ இ1

தீர்மான எண் : 726

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

6 மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண்.30, அன்னைநகர் மற்றும் திருவள்ளுவர் நகர் 2 பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி இடங்களில் பைப்லைன் விஸ்தரிப்பு செய்து தண்ணீர் வசதி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2.50 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:582/2023/இ1

தீர்மான எண் : 727

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

7 மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் சுமார் 35 கணிணிகள், 1 சர்வர், 16 பிரிண்டர்கள், 1 ஸ்கேனர் மற்றும் ஆல் இன் ஒன் பிரிண்டர் 3, டாட்மேட்ரிக்ஸ் பிரிண்டர் 2 மற்றும் அலுவலகத்தில் அவ்வப்போது ஏற்படும் சுவிட்சுகள், மோடம், கேபிள் நெட்வொர்க் ஆகியவை ஆண்டு பராமரிப்பு செய்யவும் பழுதான கணிணிகள், பிரிண்டர்கள் உடனுக்குடன் சரி செய்யவும் மற்றும் 35 கணிணிகளுக்கு, ஒரு வருடத்திற்கான ANTIVIRUS இன்ஸ்ட்டால் செய்யவும் ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:580/2023/இ1

தீர்மான எண் : 728

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2023-2024ன் குடிநீர் நிதியின் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 08.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான உதிரி சாமான்கள் வாங்குதல் மற்றும் பகிர்மானக் குழாய் உடைப்புகள் சரி செய்தல் | ரூ.9.90 இலட்சம் | திரு.M.வேலுசாமி<br><br>திரு.C.நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.85% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.M.வேலுசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:582/2023இ1

தீர்மான எண் : 729
தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 9 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி, கல்விநிதி, பொதுநிதி 2023 - 2024ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 28.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப் - பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | <u>**குடிநீர் நிதி**</u><br>மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறுகளுக்கு புதியதாக நீர் மூழ்கி மோட்டார்கள் வாங்குதல் | ரூ 2.50 இலட்சம் | திருவாளர்.அல்கம் இண்டஸ்ட்ரீஸ்<br><br>ஸ்ரீ பவர் இண்ஜினியர்ஸ் | 0.08% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண் 21 கெண்டையூர் காமராஜ் நகர் மற்றும் ஏ.டி காலனி பகுதியில் குடிநீர் பகிர்மானக் குழாய், பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்தல். | ரூ.3.00 இலட்சம் | திரு. GKS சேதுபதி<br><br>திருவாளர்.V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.92% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள பழுதடைந்த வால்வுகளை அகற்றி புதியதாக மாற்றுதல் | ரூ.10.00 இலட்சம் | திருவாளர்.அல்கம் இண்டஸ்ட்ரீஸ்<br><br>ஸ்ரீ பவர் இன்ஜினியர்ஸ் | 0.06% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | வார்டு எண் 3 சிறுமுகை பிரதான சாலையில் புதியதாக பகிர்மானக் குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ.0.60 இலட்சம் | திரு.M. வேலுசாமி<br>திரு.C. நாகராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 5 | வார்டு எண் 2 வெள்ளிப்பாளையம் சாலையில் புதியதாக பகிர்மானக் குழாய் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல் | ரூ.0.80 இலட்சம் | திரு.M. வேலுசாமி<br>திரு.C. நாகராஜ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.97% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 6 | **<u>கல்விநிதி</u>**<br>வார்டு எண் 6 எஸ்.எம் நகர் நகரவை துவக்கப் பள்ளியில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.3.00 இலட்சம் | திரு.C. நாகராஜ்<br>திரு.M. வேலுசாமி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 7 | வார்டு எண் 4 நேருஜி நகரவை பள்ளியில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தில் கூடுதல் வசதி செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திரு. GKS சேதுபதி<br>திருவாளர்.V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 8 | வார்டு எண் 16 அண்ணா மார்கெட் பகுதியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பொது கழிப்பிடத்திற்கு கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.10.00 இலட்சம் | திருவாளர்.V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br>திரு. GKS சேதுபதி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br>4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மேற்காணும் பணிகளின் அவசர அவசியம் கருதி இந்நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:580/2023இ1

தீர்மான எண் : 730

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

10 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு, அரசாணை எண் 39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.09.2023 கீழ் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-2024ன் கீழ் கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை இலட்சத்தில் | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுநிதி | நகராட்சி பங்கு தொகை |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 16 அண்ணா ஜி ராவ் சாலையில் தினசரி மார்கெட் கட்டுதல் | ரூ.440.00 இலட்சம் | ரூ.220.00 இலட்சம் | ரூ.220.00 இலட்சம் |

மேற்கண்ட பணிக்கு 31.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்படாத காரணத்தால் மறுஒப்பந்தப்புள்ளி 17.11.2023 அன்று கோரப்பட்டு சில நிர்வாக காரணங்களால் 27.11.2023 அன்று ஒத்திவைக்கப்பட்டதில் திரு.N.மாரியப்பன் திருநெல்வேலி மற்றும் திருவாளர் சர்வேஷ் & கம்பெனி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் வரப்பெற்றுள்ளது.

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 29.11.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திரு.N.மாரியப்பன் அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது மற்றும் திருவாளர் சர்வேஷ் & கம்பெனி அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி பெறவில்லை எனவே திரு.N. மாரியப்பன் அவர்களது விலைப்புள்ளி உறையினை மட்டும் 01.12.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 16 அண்ணா ஜி ராவ் சாலையில் தினசரி மார்கெட் கட்டுதல் பணி | ரூ.440.00 இலட்சம் | திரு.N.மாரியப்பன் திருநெல்வேலி | 0.12% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.N.மாரியப்பன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்:3852/2023/இ1

தீர்மான எண் : 731
தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

11 மேட்டுப்பாளையம் நகராட்சி சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்தில் பணிபுரிந்து வந்த மின் ஊழியர்கள் மகேஸ்குமார் பதவி உயர்வு பெற்று மின் கண்காணிப்பாளர் நிலை 2 குன்னூர் நகராட்சிக்கு சென்று விட்டதாலும், விக்னேஷ் மின் பணியாளர் நிலை 2 தற்போது அரசு ஆணை 10யின் படி நகராட்சியில் மின் பணியாளர் நிலை 2 பதவி மேட்டுப்பாளையம் நகராட்சியில் இல்லாத காரணத்தால் கூடலூர் நகராட்சிக்கு பணி மாறுதல் பெற்றும் சென்று விட்டதாலும், மேட்டுப்பாளையம் நகராட்சியில் ( 3 குடிநீர் திட்டம்) புதிய குடிநீத் திட்டம், பழைய குடிநீர் திட்டம், கூட்டுக்குடிநீர் திட்டம் ஆகியவற்றை பராமரிக்க நகராட்சி மின் ஊழியர்களும் பராமரிப்பு ஊழியர்களும் போதுமான அளவில் இல்லாமல் இருக்கிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண் 21787/2021/EA2 நாள் 02.10.2023 இல் நகராட்சி குடிநீர் விநியோகம் சிறப்பாக நடைபெற்று போதுமான பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்ததாரர் அடிப்படையில் நியமித்துக் கொள்ள அளவுகோல்கள், பொது வழி முறைகள் உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசு ஆணை எண் 112 நாள் 17.2.2023 இல் குடிநீர் விநியோக பணியாளர்களை

| | |
|---|---|
| | வெளிக்கொணர்வு (Outsource) முகமை மூலம் ஒப்பந்ததாரர் அடிப்படையில் நியமித்துக் கொள்ள அனுமதி அளித்துள்ளது.<br>சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் சுத்திகரிப்பு உதவியாளர் 3 பேர் மட்டுமே பணியில் உள்ளனர் மின் மோட்டார் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி செய்வதில் சிரமம் ஏற்படுகிறது. எனவேஅவசர அவசியம் கருதி அரசு ஆணை எண் 112 நாள் 17.08.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் 21787/2021/EA2 படி கீழே கண்ட விபரப்படி ஊழியர்கள் வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்ததாரர் அடிப்படையில் அமர்த்திக் கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. ஊழியர்களுக்கான 89 நாட்களுக்கு மொத்தம் (218940 + 71948 ) ரூ 390888/- (மூன்று இலட்சத்தி தொன்னூராயிரத்து எண்ணூற்று எண்பத்து எட்டு மட்டும்) யை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.<br>தேவைப்படும் ஊழியர்கள் தலைமை நீரேற்று நிலையம்:<br>1. மின்பணியாளர் நிலை 2 -- 3 நபர்கள் (8 மணி நேரப்பணி)<br>2. உதவியாளர் -- 3 நபர்கள் (8 மணி நேரப்பணி)<br>3. உதவியாளர் -- 2 நபர்கள் (பூஸ்டர் நீரேற்று நிலையம்)<br>மேற்கண்ட ஊழியர்களுக்கான ஊதியம் பொதுப்பணிகள் துறை பட்டியல் 2023 - 24 யின்படி மின்பணியாளர் நிலை 2க்கான 3 ஊழியர்களுக்கு 89 நாட்கள் ஊதியம் ரூ.2,18,940/- (3x89x820) பராமரிப்பு உதவியாளர் 5 ஊழியர்களுக்கான 89 நாட்கள் ஊதியம் ரூ.1,71,948/ (5x89x644) 8 ஊழியர்களுக்கான 89 நாட்களுக்கான மொத்த செலவினம் (2,18,940+1,71,948) ரூ 3,90,888/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மான எண் : 732<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 12 | இந்நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்ட பணிகளுக்காக ஆட்டோ விளம்பரம் செய்யப்பட்டது. ஆட்டோ விளம்பரமானது 20.04.2023ம் தேதியிலிருந்து 26.04.2023 ஆம் தேதி வரை ஏழு நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 2500/- (Two Thousand Five Hundred Only) ரூபாய் வீதம் மொத்தம் 7 நாட்களுக்கு ரூ 17500/- (Seventeen Thousand Five Hundred Only) c..நடராஜன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மான எண் : 733<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 13 | மேட்டுப்பாளையம் நகராட்சியின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் நீர் உந்து அறையில் ஒரு பக்க சுவர் பழுதடைந்து சுவர் முற்றிலும் இடிந்து விழும் நிலையில் உள்ளது. இக்கட்டிடம் 1963 இல் கட்டப்பட்டதாகும். குடிநீர் சுத்திகரிக்கப்படும் வடிகட்டிபடுகையின் சுவர் பழுதடைந்து நீர் கசிவு ஏற்படுகிறது. மேலும் Chlorine அறையில் மழை காலங்களில் நீர் கசிவு ஏந்படுகிறது. படிகார சேமிப்பு அறையின் கதவுகள் மழையின் காரணமாக உடைந்து விட்டது மேலும் 12 எண்ணிக்கை வால்வு தொட்டிகள் உயர்த்திக்கட்டப்பட வேண்டியுள்ளது குடிநீர் இரண்டு வடிகட்டியின் வடிகட்டி பொருட்கள் மாற்றப்பட வேண்டியுள்ளது. மேலும் மின் பழுதுகள் சரிசெய்யப்பட வேண்டியுள்ளது. கடந்த 12 வருடங்களாக எவ்வித பராமரிப்பு பணியும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இப்பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.12.50 இலட்சத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>தீர்மான எண் : 734<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

14 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி 2023-2024 ன் கீழ் மூன்று ஆண்டுகளுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவர் / ஒப்பந்ததாரர் தேர்வு செய்தல் பணிக்கு 03.05.2023 அன்று திருவாளர்.ஜெயசூர்யா இண்டஸ்ட்ரீஸ் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு ஒப்பந்ததாரர் பணிகளை சரிவர செய்யாததால் இவ்வொப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை இந்நகர்மன்ற தீர்மான எண் 721 நாள் 15.11.2023ல் ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி 05.12.2023 அன்று கோரப்பட்டதில் Offline மூலம் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் வரப்படவில்லை மற்றும் இணையதளம் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று 06.12.2023 அன்று தொழில்நுட்ப உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | மூன்று ஆண்டுகளுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவர்/ ஒப்பந்ததாரர் தேர்வு செய்தல் | ரூ.451.72 (ஓர் ஆண்டுக்கு) | 1. திருவாளர் ,டெக்டஸ் இண்ப்ரா பிரைவேட் லிமிடெட்<br>2. திருவாளர் . செந்தூர் எண்டர் பிரைசஸ் |

மேற்காணும் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர்.டெக்டஸ் இண்ப்ரா பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மட்டும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது மற்றும் திருவாளர்.செந்தூர் எண்டர் பிரைசஸ் அவர்களின் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது எனவே, திருவாளர்.டெக்டஸ் இண்ப்ரா பிரைவேட் லிமிடெட் அவர்களின் விலைப்புள்ளி உறையினை 08.12.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | மூன்று ஆண்டுகளுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவர்/ ஒப்பந்ததாரர் தேர்வு செய்தல் | ரூ.451.72 (ஓர் ஆண்டுக்கு) | திருவாளர். டெக்டஸ் இண்ப்ரா பிரைவேட் லிமிடெட் | 0.04% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.டெக்டஸ் இண்ப்ரா பிரைவேட் லிமிடெட் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண் 4481/2023/எச்1

தீர்மான எண் : 735

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் அரசாணை எண் 39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.09.2023 ன் கீழ் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-2024 ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | கலைஞர் மேம்பாட்டு நிதி | பொதுமக்கள் பங்களிப்பு தொகை |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 3 சிறுமுகை சாலையில் வாரச்சந்தை கட்டுதல் பணி (க.ச.எண்137) | ரூ.129.00 இலட்சம் | ரூ.90.00 இலட்சம் | ரூ.39.00 இலட்சம் |

மேற்காணும் பணிக்கு 06.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Offline மூலம் எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் வரப்படவில்லை மற்றும் இணையதளம் மூலம் நான்கு ஒப்பந்தப்புள்ளிகளும் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பையர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 3 சிறுமுகை சாலையில் வார சந்தை கட்டுதல் பணி (க.ச.எண் 137) | ரூ.129.00 இலட்சம் | 1. திருவாளர். சர்வேஸ் & கம்பெனி<br>2. திரு.N. மாரியப்பன்<br>3. திருவாளர். GMD வெண்ச்சர் பிரைவேட் லிமிடெட்<br>4. திருவாளர்.RS கன்ஸ்ட்ரக்சன் |

மேற்காணும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர். சர்வேஸ் & கம்பெனி மற்றும் திரு.N. மாரியப்பன் அவர்களின் வரைவோலை(DD) வரப்படாத காரணத்தால் அவ்விரு ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரிக்கப்பட்டு மீதமுள்ள திருவாளர்.RS கன்ஸ்ட்ரக்சன் மற்றும் திருவாளர். GMD வெண்ச்சர் பிரைவேட் லிமிடெட் அவர்களின் தொழில்நுட்ப உறையினை 08.12.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களுமே தொழில்நுட்ப தகுதி வரப்பெற்றுள்ளது. எனவே இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறையினை 11.12.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 3 சிறுமுகை சாலையில் வார சந்தை கட்டுதல் பணி (க.ச.எண் 137) | ரூ.129.00 இலட்சம் | 1.திருவாளர்.RS கன்ஸ்ட்ரக்சன்<br><br>2. GMD வெண்ச்சர் பிரைவேட் லிமிடெட் | 0.09% மதிப்பீட்டிற்கு குறைவு<br>0.79% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.RS கன்ஸ்ட்ரக்சன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| | **<u>அலுவலகக் குறிப்பு</u>**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 3852/2023/இ1<br>தீர்மான எண் : 736<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 16 | அரசாணை எண் 39, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 14.09.2023 ன் கீழ் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2023-2024 கீழ் வார்டு எண் 5 பழைய நகராட்சி அலுவலகம் அருகில் தினசரி மார்க்கெட் (இறைச்சி மற்றும் மீன் ) கட்டுதல் பணிக்கு கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. |

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | கலைஞர் மேம்பாட்டு நிதி | பொதுமக்கள் பங்களிப்பு தொகை |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 5 பழைய நகராட்சி அலுவலகம் அருகில் தினசரி மார்க்கெட் (இறைச்சி மற்றும் மீன் ) கட்டுதல் | ரூ.259.00 இலட்சம் | ரூ.130.00 இலட்சம் | ரூ.129.00 இலட்சம் |

மேற்காணும் பணிக்கு 06.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Offline மூலம் எவ்வித ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்படவில்லை மற்றும் இணையதளம் மூலம் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் (திருவாளர்.RS கன்ஸ்ட்ரக்சன் மற்றும் GMD வெண்ச்சர் பிரைவேட் லிமிடெட்) என வரப்பெற்றுள்ளது.

மேலும் 08.12.2023 அன்று தொழில்நுட்ப உறையினை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் திருவாளர்.RS கன்ஸ்ட்ரக்சன் மற்றும் GMD venture pvt Ltd இருவருமே தொழில் நுட்ப தகுதியினை பெற்றுள்ளது. எனவே ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறையினை 11.12.2023 அன்று கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 5 பழைய நகராட்சி அலுவலகம் அருகில் தினசரி மார்க்கெட் (இறைச்சி மற்றும் மீன் ) கட்டுதல் | ரூ.259.00 இலட்சம் | 1.திருவாளர்.RS கன்ஸ்ட்ரக்சன்<br><br>2. GMD வெண்ச்சர் பிரைவேட் லிமிடெட் | 0.07% மதிப்பீட்டிற்கு குறைவு<br>0.35% மதிப்பீட்டிற்கு குறைவு |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.RS கன்ஸ்ட்ரக்சன் அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மான எண் : 737

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

| | |
|---|---|
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட சாந்திநகர் பகுதியில் குழந்தைகள் நல மைய கட்டிடத்தின் சுற்றுச்சுவர் தற்போதைய மழையின் காரணமாக சுமார் 90மீ நீளம் இடிந்துள்ளது. மேலும் சுமார் 12.80மீ நீளம் மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. இதனால் குழந்தைகளுக்கு ஆபத்தான சூழ்நிலை உள்ளது. எனவே பாதிப்படைந்த 12.80மீ நீள சுற்றுச்சுவரை உடனடியாக இடித்து அப்புறப்படுத்த வேண்டும். மேலும் 25.00 மீ சுற்றுச்சுவர் புதியதாக அமைக்கப்பட வேண்டும்.<br>எனவே பாதிப்படைந்த சுற்றுச்சுவரை உடனே இடித்து அப்புறப்படுத்த அனுமதி வேண்டியும் புதியதாக சுற்றுச்சுவர் 25.00மீ நீளத்திற்கு கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 7.00 இலட்சத்திற்கு கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**:- மன்றம் அனுமதி வழங்கலாம்<br>தீர்மான எண் : 738<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 18 | திரு.எம்.ரங்கநாதன் என்பவரால் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் Affidavit வரப்பெற்றுள்ளது. அவை கீழ்க்கண்டவாறு<br>1. W.P.No: 32428/2023<br>2. W.P.No: 32994/2023<br>மேற்படி வழக்குகளை நகராட்சி சார்பாக நடத்த வழக்கு பதிவுக்கட்டணம் முறையே தலா ரூ.20,000/ஐ வழங்குமாறு திரு.பி.ஆனந்த், வழக்கறிஞர் சென்னை அவர்கள் கோரியுள்ளார்கள். எனவே, மேற்படி வழக்குகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/ க்கு மன்றத்தின் அனுமதி வேண்டுப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க. எண் : 4393/2023/சி1<br><br>தீர்மான எண் : 739<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |
| 19 | மாண்புமிகு. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட மக்களுடன் முதல்வர் திட்டத்தின் மூலம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் முகாம்கள் அமைக்கப்பட்டு பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்கள் வசிப்பிடத்திலேயே தீர்வுகாண சிறப்புத்திட்டமாக செயல்படுத்தப்படவுள்ளது.<br>சுமார் 5 அமைவிடங்களில் 10க்கும் மேற்பட்ட துறைகள் கலந்து கொண்டு பொதுமக்களிடம் கோரிக்கைகளைப் பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளன மேற்கண்ட அமைவிடங்களில் நகராட்சி சார்பாக அடிப்படை வசதிகள் மேற்கொள்ள வேண்யுள்ளது. பல்வேறு துறை அலுவலர்கள் மற்றும் திரளாக பொதுமக்கள் கலந்து கொள்ளவுள்ளதால் எவ்வித குறைபாடுமின்றி சிறப்பாக அனைத்து வசதிகளும் செய்ய வேண்டியுள்ளது.<br>எனவே முகாம் ஏற்பாடுகள் மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**:- மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க. எண் : 4545/2023/சி3<br>தீர்மான எண் : 740<br>தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது . |

20

தலைமை நீரேற்று நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களின் ஆகஸ்ட் 2023 முதல் அக்டோபர் 2023 வரை உண்டான மூன்று மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.1,34,914/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியாளர்களின் பெயர் | பதவியின் பெயர் | மிகைநேரப் பணி (Hours) | | |
|---|---|---|---|---|---|
| | | | ஆகஸ்ட் 2023 | செப்டம்பர் 2023 | அக்டோபர் 2023 |
| 1 | எஸ்.மகேஸ் குமார் | மின்பணியாளர் நிலை 4 | 40 | 40 | 56 |
| 2 | என்.கிருஷ்ண மூர்த்தி | கிளீனர் | 40 | 48 | 56 |
| 3 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 48 | 40 | 56 |
| 4 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 32 | 32 | 48 |

| வ.எண் | ஆகஸ்ட் 2023 | செப்டம்பர் 2023 | அக்டோபர் 2023 | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | 14,647 | 15,135 | 20,506 | 50,288 |
| 2 | 9,019 | 11,183 | 12,989 | 33,191 |
| 3 | 10,625 | 9,149 | 12,758 | 32,532 |
| 4 | 5,350 | 5,528 | 8,025 | 18,903 |
| | ரூ. 93,641 | ரூ-40,995 | ரூ.54,278 | ரூ.1,34,914 |

(ரூபாய் ஒரு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து பதினான்கு மட்டும் )

மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 30.03.1989ம் தேதிய ந.க.எண் 24372/89/ஒபி1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் ஆகஸ்ட் 2023 முதல் அக்டோபர் 2023 வரை உண்டான மூன்று மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.1,34,914/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்: 5220/2011/இ1

தீர்மான எண் : 741

தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .

21

மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் நிதி 2023 - 2024ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு 14.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப் -பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி உரக்கிடங்கில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Decanting facility அமைக்கும் இடத்தில் கழிவுநீர் மின்மோட்டார் மற்றும் குழாய் அமைக்கும் பணி | ரூ.4.00 இலட்சம் | திருவாளர்.V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ்<br><br>திரு. GKS சேதுபதி | 0.02% மதிப்பீட்டிற்கு குறைவு<br><br>4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |

| | |
|---|---|
| | மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் பணியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:-** மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்:** 582/2023/இ1<br>**தீர்மான எண் :** 742<br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .** |
| 22 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முடிவடைந்து வீடுகளுக்கு 16250 இணைப்புகள் வழங்கும் பணிக்கு ரூ.1240.00 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் 20.02.2023ந் தேதிய ந.க.எண் 15713/2022/இஎ-1 எண்ணிட்ட செயல்முறை உத்திரவில் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்டுள்ளார்கள். பாதாள சாக்கடை திட்டத்தினை முழுமையாக செயல்படுத்த வேண்டிய அவசியத்தின் பேரிலும் காலதாமதமாக வீட்டு பாதாள சாக்கடை இணைப்பு வழங்குவதால் நகராட்சிக்கு வர வேண்டிய வருவாய் இழப்பு ஏற்படுவதால் அதனை தடுக்கும் பொருட்டு பாதாள சாக்கடை திட்ட வரைவில் சேர்க்கப்பட்ட 16250 வீட்டு இணைப்புகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கவும் மேற்படி மதிப்பீட்டுத் தொகையினை கொண்டு பணியினை செயல்படுத்திட போதிய நிதி ஆதாரம் இல்லாததால் TUFIDCO நிறுவனத்தின் மூலம் 5% வட்டியுடன் கடன் பெற்று இப்பணியினை மேற்கொள்ளவும், கடன் தொகையினை 7 வருட காலத்திற்குள் தவணை முறையில் திருப்பி செலுத்திடவும், பணிகள் முடிவடைந்து செயல்பாட்டுக்கு வருகின்றபோது கட்டிட உரிமையாளர்களிடமிருந்து இணைப்பு கட்டணத்தை தவணை முறையில் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மேற்கண்ட திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி TUFIDCO நிறுவனம் மூலம் ரூ.1240.00 இலட்சம் தொகையினை 5% வட்டி கடனாக பெற்று செயல்படுத்திட 25.08.2023 அன்று இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததனை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண்:** 1819/2016/இ1<br>**தீர்மான எண் :** 743<br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .** |
| 23 | மேட்டுப்பாளையம் நகராட்சியின் 33 வார்டுகளில் புதிதாக 125 எண்ணம் தெருவிளக்குகள் அமைக்க ரூ.18.04 லட்சம் 15 வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மின்சாரவாரியத்திற்கு ரூ.1329320 செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட மின் கட்டணத் தொகை ரூ.652000க்கு மேல் ரூ.677320 கூடுதலாக மின்வாரிய கேட்புத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. தற்பொழுது 22 புதிய மின் இணைப்புகளுக்குரிய சுவிட்ச் பாக்ஸ் மற்றும் இதர மின் மின்பொருட்கள் பொருத்த வேண்டியுள்ளது. இதன் உத்தேச மதிப்பீடு ரூ.1.10 லட்சம் செலவாகும் இதற்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை எனவே கூடுதலாக செலுத்தப்பட்ட மின்கட்டணம் ரூ. 677320 மற்றும் சுவிட்ச் பாக்ஸ் மின் பொருட்களுக்குரிய உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.110000 மொத்தம் ரூ.787320 (ரூ.677320+ரூ.110000) செலவு மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாகிறது.மேலும் நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலத்தில் இருந்து வரப்பெற்ற 125 புதிய தெருவிளக்குகளுக்குரிய நிர்வாக அனுமதி கடிதத்தில் மதிப்பீட்டிற்குத் தொகைக்கு மேல் ஆகும் கூடுதல் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம் என குறிப்பிட்டு உள்ளது .எனவே |

கூடுதலாக ஏற்படும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி திட்டப்பணி உடனடியாக முடிக்க வேண்டியிருப்பதாலும் அவசர அவசியமாக இருப்பதாலும் விரைவில் பணிமேற்கொள்ள சுவிட்ச் பாக்ஸ்அமைப்பதற்குரிய பணியை உள்ளுர் விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்**: 959/2021/இ1

**தீர்மான எண்** : 744

**தீர்மானம்** : **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .**

24 **மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்கு செல்லும் பாதை சுற்றுலாத்தலத்திற்கு செல்லும் பாதை என்பதால் முக்கிய பிரமுகர்கள், சுற்றுலா பயணிகள் செல்கின்றார்கள். மேலும் 33 வார்டுகளில் செடிகள், புற்கள், வளர்ந்து அதனை பணியாளர்கள் கொண்டு சுத்தம் செய்ய சுகாதாரப்பிரிவிற்கு தலா ஒன்று வீதம் 4** (நான்கு) **எண்ணிக்கை** (**சிறிய அளவு**) **புற்கள் வெட்டும் இயந்திரங்கள் வாங்க** 15.12.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. **இதில்** கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திருவாளர் சித்தார்த் அஸோசியேட்ஸ், கோயமுத்தூர். | ரூ. **99,500** /- |
| 2 | திருவாளர் எஸ்.எஸ். அஸோசியேட்ஸ், மதுரை | **ரூ**. 99, 900 /- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்.**சித்தார்த் அஸோசியேட்ஸ், கோயமுத்தூர்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று **பணி உத்திரவு வழங்க** மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மான எண்** : 745

**தீர்மானம்** : **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .**

25 மேட்டுப்பாளையம் நகராட்சி வளர்ச்சிப்பணிகள் குறித்து தினசரி நாளிதழ்களில் "**தொழில் மலர்**" பதிப்புகளில் விளம்பரம் வெளியிடவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 3,00,000/ (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**:- 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் ஏற்கலாம்

ந.க.எண்: 1441/2021/சி3

**தீர்மான எண்** : 746

**தீர்மானம்** : **அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .**

| | |
|---|---|
| 26 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் சேகரமாகின்ற குப்பைகளை சுத்தம் செய்ய, நகராட்சி வாகனமான LCV வாகனத்தை தினசரி வாடகை அடிப்படையில் ஜெயசூர்யா இண்டஸ்ட்ரிஸ், திருப்பூர் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு இருந்தது. தற்பொழுது மேற்கண்ட நிறுவனத்திற்கு 15.11.2023ம் தேதி முதல் பணி உத்திரவு இரத்து செய்யப்பட்டு உள்ளது. இந்நகரில் சேகரமாகின்ற குப்பைகளை அகற்ற நகராட்சி வாகனம் (LCV)3 பழுது அடைத்து உள்ள இவ்வாகனத்தை இயக்க முடியாமல் உள்ளது. இவ்வாகனத்திற்கு பதிலாக தனியார் வாகனம் இரண்டு டிராக்டர் அமர்த்தி பணிபுரியவும், அதற்கு தேவையான எரிபொருள் நிரப்பவும், மேலும் சேகரமாகின்ற குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து MCC மையத்திற்கு கொண்டு சேர்க்க போதிய வாகனம் நகராட்சியில் இல்லாதால் மூன்று LCV வாகனம் புதிய நிறுவனம் அமையப்பெறும் வரை அல்லது 8 LCV வாகனங்கள் (Onroad) வரும் வரை அமர்த்தி கொள்ளவும், அதற்கு எரிபொருள் நிரப்பவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2,00000 /- (இரண்டு இலட்சம்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மான எண் : 747**<br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .** |
| 27 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் முக்கிய தெருக்களில் கால்நடைகளான ஆடு, மாடு, கழுதை மற்றும் பன்றிகள் அரசு வழிகாட்டுதலின்படி பிடித்து அப்புறப்படுத்த ஒப்பந்த முறையில் பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 5,00000/- (ஐந்து லட்சத்திற்கு) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: **அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததை மன்றம் அனுமதிக்கலாம்.**<br><br>**தீர்மான எண் : 748**<br>**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது .** |
| 28 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடிதம் ந.க.எண்:7145/2023/எம்ஏ2, நாள்:15.12.2023-ன் படியும், நகராட்சிக்கு அருகிலுள்ள ஊராட்சிகளை இணைக்கும் வகையில் அரசாணை (நிலை) எண் 142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்:23.11.2023-ன் படியும் உள்ளாட்சி தேர்தலுக்கு முன் நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு அருகிலுள்ள சிக்கதாசம்பாளையம் கிராமம், அன்னூர் ரோடு, ஜடையம்பாளையம் வரையிலும், சிறுமுகை ரோடு, மாதேஸ்வரன் நகர் வரையிலும், மேட்டுப்பாளையம் கோவை ரோடு, காரமடை நகராட்சி எல்லை வரையிலும் மற்றும் ஓடந்துறை கிராமம் ஊட்டி ரோடு சச்சிதானந்தா பள்ளி, இரயில்வே கேட் வரையிலும், தேக்கம்பட்டி ஊராட்சி, குரும்பனூர் வரை நகராட்சிப் பகுதியில் இணைக்கவும், ஓடந்துறை, ஜடையம்பாளையம், தேக்கம்பட்டி மற்றும் சிக்கதாசம்பாளையம் கிராமங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் மூலம் தீர்மானங்கள் இயற்றி வழங்க தெரிவிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. மேற்கண்டவாறு மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லையினை விரிவாக்கம் செய்திடவும், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதல் பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**தீர்மான எண் : 749**<br>**தீர்மானம் : அனுமதிக்கப்பட்டது.** |